[8th August 1966

(இ) 1965-ஜனவரி முதல் புதிதாக மாற்றப்பட்டிருக்கிற கட்டடத்திற்கு கொடுக்கப்படுகிற வாடகைத் தொகை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Only one Office, viz., Circle Office, Mylapore was located in one small building at 176, Rama Krishna Mutt Road, Mylapore. The rent demanded by the owner is Rs. 500. The fair rent has not been fixed by the Public Works Department authorities. The Circle Office was closed down and a Government Ration Shop is now functioning there.

(*b*) The rent demanded by the owner for the new building at 961, Katchery Road, Mylapore, which houses three Circle Offices, a Zonal Office and a Government Ration Shop including the Circle Office at Mylapore is Rs. 1,850. The fair rent has not yet been fixed by the Public Works Department authorities.

திரு. செ. மாதவன் : 500 ரூபாய் வாடகை கேட்டதாய் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் செய்வதற்கு முன்னால், அதே வீட்டுக்கு, அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு முன்னால் குறைந்த வாடகைத்தான் இருந்தது என்று தெரிகிறது. அதற்கு முன்பு 200 ரூபாய் வாடகை இருந்ததாகத் தெரிகிறது. ஆகவே இதைப் பரிசிலனை செய்வார்களா ?

கனம் திரு. வெ. ராமையா : அவசர நிமித்தமாகச் சில ஏற்பாடுகளை சிவில் சப்ளைஸ் ஆபீசர்ஸ் செய்கிறார்கள். அவ்வாறு ஃபேர் ரெண்ட் ஃபிக்ஸ் பண்ணவேண்டிய பொறுப்பு பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மென்டைப் பொறுத்தது. அவர்கள் வேண்டிய தகவல்களை வைத்துக்கொண்டு முடிவு செய்வார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : ஃபேர் ரெண்ட் எந்த அடிப்படையில் ஃபிக்ஸ் செய்கிறார்கள் ?

கனம் திரு. வெ. ராமையா : அதற்காக ஸ்பெஸிஃபிக் ரூல்ஸ் பி.டபிள்யூ.டி. யில் இருக்கின்றன.

Sugar

* 222 *Q*.—SRI V. SANKARAN : Will the hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any report has been received regarding accumulation of sugar stocks in the North Arcot Co-operative Sugar Mills at Ambur; and

(*b*) if so, the details thereof and the action proposed thereon?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : அமைச்சர் அவர்கள் இன்றைக்குள்ள நிலையைப் பற்றிச் சொல்லுகிறார்கள். நான் கேள்வி போட்ட நேரத்தில் இந்த மாதிரி முடங்கிக் கிடந்தது என்பது உண்மையா ?

கனம் திரு. வெ. ராமையா : அன்றைக்கு இருந்த நிலைமைக்குத் தான் பதில் சொல்லியிருக்கிறேன்.